(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO.112/2019 P.W - 4**

Name : கவின்
Father's name : முருகன்
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 06.04.2022.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சென்னையில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். என்னுடைய பெற்றோர் வீடு மதுரை ஆரப்பாளையம் கண்மாய்கரையில் உள்ளது. ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அ.சா.2 என்னுடைய நண்பர் ஆவார். கடந்த 16.06.2018 ஆம் தேதி ஹேமந்த் எனக்கு போன் செய்தார். போனை என் அம்மா எடுத்து, நான் தூங்குவதாக சொன்னார். அதன்பின்னர் நான் யார் போன் செய்தது என்று என் அம்மாவிடம் கேட்டதற்கு அவர் ஹேமந்த் போன் செய்ததாக சொன்னார். நான் உடனே திருப்பி ஹேமந்துக்கு போன் செய்து என்ன என்று கேட்டேன். அதற்கு அவன் விஸ்வாவீட்டிற்கு வா என்று சொன்னான். நான் விஸ்வாவீட்டிற்கு போவதற்குள் போகும் வழியிலுள்ள ஜென்னட் ஆஸ்பத்திரி அருகில் ஹேமந்த் மற்றும் விஸ்வா வந்துவிட்டார்கள். அதன்பின்னர் நாங்கள் மூவரும் விஸ்வா வீட்டிற்கு சென்றோம். நாங்கள் போய் 5 நிமிடம் கழித்து சார்வாகன் வந்து கதவை தட்டினான். விஸ்வா போய் என்ன என்று பார்க்கும் போது, சார்வாகன் தன்னுடைய பாட்டிக்கு அடிபட்டுவிட்டது என்று சொன்னான். இந்த விபரத்தை விஸ்வா என்னிடம் சொன்னான். நாங்கள் வீட்டிற்கு வெளியே நின்று பார்த்த போது பாட்டி கீழே விழுந்துகிடந்தது தெரிந்தது. அப்போதே நானும், ஹேமந்தும் வீட்டிற்கு சென்றுவிட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

16.06.2018 ஆம் தேதி நான் வீட்டில் இருக்கும் போது ஹேமந்துக்கு போன் செய்த நேரம் மதியம் சுமார் 3 மணி இருக்கும். என்னுடைய வீட்டிற்கும், விஸ்வாவுடைய வீட்டிற்கும் இடையே 1 கி.மீ தூரம் இருக்கும். விஸ்வா வீட்டிற்கு நான் நடந்து சென்றேன். போலிசார் விசாரணையில் ஜென்னட் ஆஸ்பத்திரி அருகில் சென்ற போது ஹேமந்தும், விஸ்வாவும் வந்துவிட்டார்கள் என்று நான் சொன்னேன். போலிசார் விசாரணயில் நான் விஸ்வா வீட்டிற்கு சென்றேன் என்றும், அங்கு எதிரி சார்வாகன் விஸ்வாவும், ஹேமந்தும் வீட்டில் இல்லை வெளியே போய் பார் என்று சொன்னதாக நான் கூறினேனா என்று எனக்குத் தெரியவில்லை. நானும், ஹேமந்தும், விஸ்வாவும் இருக்கும் போது போலிசார் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. என்னையும், ஹேமந்த், விஸ்வா மற்றும் எதிரியையும் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று போலிசார் விசாரித்தார்கள். 17, 18, 19.06.2018 ஆகிய மூன்று நாட்களில் எங்களை காலையில் காவல்நிலையத்திற்கு வரச்சொலலி மாலையில் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். 19.06.2018 ஆம் தேதி எங்கள் நான்கு பேரையும் மற்றும் எதிரியின் அப்பாவையும் இரவு 9.30 மணி வரை காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள். அதன்பின்னர் எங்கள் மூவரையும் மற்றும் எதிரியின் தகப்பனாரையும் அனுப்பிவிட்டு எதிரியை மட்டும் காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அதன்பின்னர் நான் எதிரியை பார்க்கவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.

(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)
**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
**SESSIONS CASE NO**.112/2019 **P.W** - 5

Name : ஹேமந்த்குமார்
Father's name : அறிவழகன்
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 06.04.2022.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது மதுரை காளவாசல் பாண்டியன் நகரில் குடியிருந்து வருகிறேன். அரசு வேலைக்காக படித்துக் கொண்டிருக்கிறேன். அ.சா.4, ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். விஸ்வா என்னுடைய பள்ளிநண்பர் அவரைத் தெரியும். கடந்த 16.06.2018 ஆம் தேதி ரம்ஜான் அன்று என்னுடைய பள்ளி நண்பன் ஷேக் என்பவன் அவனுடைய வீட்டிற்கு என்னை அழைத்திருந்தான். அவன் வீட்டிற்கு சென்று சாப்பிட்டுவிட்டு மாலை சுமார் 3,4 மணியளவில்திரும்பி வரும் போது என்னுடைய நண்பன் கவினுக்கு நான் போன் செய்தேன். அவர் அம்மா போன் எடுத்து, அவன் தூங்கி கொண்டிருப்பதாக சொன்னார். இரண்டு நிமிடம் கழித்து கவின் எனக்கு போன் செய்து, என்ன என்று கேட்டான். அதற்கு நான் விஸ்வா வீட்டிற்கு வரச் சொன்னேன். நாங்கள் விஸ்வா வீட்டில் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தோம். 5 நிமிட்ம் கழித்து வெளியே இருந்து எதிரி அழைத்தான். விஸ்வா வெளியே சென்றான். அதன்பின்னர் உள்ளே வந்து வேகமாக சுத்தியல் எடுத்துக கொண்டு விஸ்வா சென்றான். நான் என்ன என்று பார்ப்பதற்காக பின்னால் சென்றேன். அப்போது எதிர்வீட்டில் இருந்த பாட்டி கட்டிலில் இருந்து கீழே கிடந்ததை பார்த்தேன். விஸ்வாவும், எதிரியும் பாட்டி வீட்டின் வெளிகேட்டு பூட்டை உடைக்க முயற்சி செய்தார்கள். சாவி உள்ளே கீழே கிடந்ததை பார்த்துவிட்டார்கள். ஒரு குச்சியை எடுத்து சாவியை உள்ளேயிருந்து தள்ளி

எடுத்து பின்னர் பூட்டை திறந்து உள்ளே போனார்கள். நானும், கவினும் வெளியே நின்று கொண்டிருந்தோம். கீழே கிடந்த பாட்டியை சுற்றிலும் இரத்தம் இருந்தது. அதன்பின்னர் போலிசுக்கு போன் செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

16.06.2018 ஆம் தேதி என் நண்பன் கவினுக்கு நான் போன் செய்யும் போது மாலை சுமார் 3.15 மணி இருக்கும். நான், கவின், விஸ்வா ஆகியோர்கள் அன்று ஜென்னட் ஆஸ்பத்திரி அருகில் சந்தித்தோம். விஸ்வா வீட்டிற்கு செல்லும் போது 3.30 மணிக்கு மேல் இருக்கும். விஸ்வா வீடு பூட்டியிருந்தது. விஸ்வா வீட்டின் சாவி எதிர்வீட்டிலுள்ள பாட்டி வீட்டின் கிரில் கேட்டில் மேல்உள்ள கொக்கியில் தொங்கி கொண்டிருந்ததா என்று நான் பார்க்கவில்லை. அந்த பாட்டி வீட்டிற்கும், விஸ்வா வீட்டிற்கும் இடையில் சுமார் 5 அடி இடம் இருக்கும். போலிசுக்கு எதிரிதான் போன் செய்தார். அப்போது நேரம் மாலை 4.15 முதல் 4.30 மணிக்குள் இருக்கும். போலிசார் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. நாங்கள் கிளம்பிவிட்டோம். போலிசார் முதலில் என்னை என்னுடைய வீட்டிற்கு வந்து 16.06.2018 ஆம் தேதி காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரித்தார்கள். அப்போது இரவு 11 மணிக்கு மேல் இருக்கும். நான் காவல்நிலையத்திற்கு செல்லும் போது விஸ்வா, கவின், எதிரி, மற்றும் எதிரியின் அப்பா அங்கு இருந்தார்கள். எங்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால், தனித்தனியாக விசாரித்தார்கள். 19.06.2018 ஆம் தேதி கையெழுத்து வாங்கினார்கள். 17, 18, 19.06.2018 ஆகிய தேதிகளில் காவல்நிலையத்திற்கு தினமும் அழைத்து விசாரித்து, மீண்டும் அனுப்பிவிட்டார்கள். 19.06.2018 ஆம் தேதி நான், கவின், விஸ்வா, எதிரிமற்றம் அவருடைய அப்பா ஆகியோர்களை எத்தனை மணிக்கு காவல்நிலையம் வரச் சொன்னார்கள் என்றால் மாலை 5 மணிக்கு வரச் சொன்னார்கள். நான் 5 மணிக்கு சென்றேன். எதிரி, கவின், விஸ்வா எத்தனை

மணிக்கு காவல்நிலையம் வந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் போகும் போது விஸ்வா, கவின் இருந்தார்கள். எதிரியை பார்க்கவில்லை. காவல்நிலையத்தில் இருந்து இரவு 8 மணிக்கு நான், கவின், விஸ்வா ஆகியோர் வெளியே வந்துவிட்டோம். அப்போது நடந்த விபரத்திற்கு எங்களிடம் போலிசார் வாக்குமூலம் பதிவு செய்து கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள். நாங்கள் காவல்நிலையத்தில் இருந்து வெளியே வரும் போது எதிரியையும், அவர் தகப்பனாரையும் காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.